1984 மார்ச் 15]

நகராட்சிகளில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் திட்டம்.

325—(*வினா 18089)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக்கொள்ள ஆகும் செலவினைக் கடனாகக் கொடுத்து உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வறட்சி நிவாரணப் பணியின் கீழ் நகராட்சிகளில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. செலவில் பாதித் தொகை மான்யமாகவும், பாதித் தொகை கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. சி. கணேசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தமாக 106 நகராட்சிகளுக்கு மேல் இருக்கின்றன. பஞ்ச நிவாரண வேலைகளின் மூலமாக மொத்தமாக எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது? கொடுக்கப்பட்ட பணத்தில் இது வரையில் எவ்வளவு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணியின்கீழ் கொடுக்கப்படுவது எல்லாம் பாதி மானியம், பாதி கடன் என்ற முறையில் கொடுக்கப்படு கிறது. மொத்தம் எவ்வளவு என்ற தகவல் தற்போது என் னிடத்தில் இல்லை.

திரு. சி. கணேசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற 106 நகராட்சிகளில், பல நகராட்சிகள் தன்னைத்தானே சமாளித்துக்கொள்ள முடியாத அளவுக்கு சக்தியற்று இருக்கின்றன குறிப்பாக செங்கற்பட்டு நகராட்சியில் மின்சார செலவுக்கு மட்டும் ரூ. 15 இலட்சம் ஆகிறது. அதைத் கூட ஒன்றரை ஆண்டு களாகக் கட்ட முடியாமல் இருக்கிறது. இப்படி தன்னைத் தானே சமாளித்துக்கொள்ள முடியாத நகராட்சிகளுக்கும் பாதி கடனாகக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அந்தக் கடனை மானியமாக மாற்றிக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, இந்த வறட்சி நிவாரணப்பணியின்கீழ் கொடுக்கப்படுவது தான் பாதி மானியம், பாதி கடன். இல்லை என்றால், பொதுவாக எல். ஐ. சி. மூலமாகவும் அரசுத் துறைகள் மூலமாகவும் முழு வதையும் கடனாகக் கொடுத்து, திரும்பப்பெற்றுக்கொள்ள

நடவடிக்கை எடுக்கப்படும். எனவே வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் பாதி மானியம், பாதி கடன் என்று கொடுக்கப்பட்டதால் அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவியாக இருக்க வேண்டும்.

நாராவாரிக்குப்பம் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்வழங்கும் திட்டம்.

326 —(*வினா 19279)— திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்குன்றம்—நாராவாரிக்குப்பம் பேரூராட்சிக்கென நிரந்தரக் குடிநீர்த்திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ): செங்குன்றம்—நாராவாரிக்குப்பம் பேரூராட்சிக்குத் தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

மேலப்பாளையம் நகராட்சிப்பகுதிக்குக் குடி நீர் வழங்கும் திட்டம்.

327—(*வினா 19819)—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) இத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூ. 142.20 இலட்சங்கள்.

(ஆ) இத்திட்டத்தின் வேலைகள் இப்பொழுது நடைபெற்றுகொண்டிருக்கின்றன.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, நெல்லை பேரூராட்சி இப்போது மாநகராட்சியாக மாறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தத் திட்டம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த தகவல் பிரகாரம் இந்தத் திட்டம் இன்னும் துவங்கப்படவேயில்லை. எப்போது முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?